## 18.4 உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேவைப்படும் தெருவிளக்கு உபகரணங்கள் வாங்குதலுக்கான வழிமுறைகள்

ஊரக வளர்ச்சி துறை (தி 3) துறை

அரசாணை (நிலை) எண். 149 நாள் : 16.7.1998

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 225, ஊரக வளர்ச்சி துறை நாள் 16.7.97.
2. அரசாணை (நிலை) எண் 195. நிதிதுறை , நாள் 4.5.98.
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண் 27925/98ஜி, நாள் 5.5.98.
4. பேரூராட்சிகள் இயக்குநரின் நே.மு.க எண் 5363/98/டி4. நாள் 23.5.98.
5. நகராட்சி நிர்வாக ஆணையரின் நே.மு.க எண் 72693/96/இ1, நாள் 27. 98.

**ஆணை**

1997–1998–ஆம் ஆண்டிற்கு உளள்ாடசி அமைப்புகளுக்கு தேவைப்படும் தெருவிளக்கு உபகரணங்களை எந்தெந்த கம்பெனிகளிடம் வாங்குவது, எந்த விலையில் வாங்குவது என படிக்கப்பட்ட அரசு ஆணை நிலை எண் 225 ஊரக வளர்ச்சி துறை நாள் 16.7 .97 இல் அரசு ஆணையிட்டது இவ்வாணை ஒராண்டு காலத்திற்கு உரியதாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு வரையறுக்கப்பட்ட காலம் 15.7. 98 உடன் முடிவடைகிறது.

2. 27.4.98 அன்று சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அவர்கள் கீழ்கண்டாவாறு அறிவிப்பினை அறிவித்தார்.

" தெருவிளக்குப் பராமரிப்பிற்காக, ஊராட்சிகள் ஐ.எஸ்.ஐ முத்திரையுடன் கூடிய மின் பொருட்களை உள்ளூரிலேயே வாங்கிக்கொள்ள அனுமதிக்கப்படும்"

ஊரக வளர்ச்சி இயக்குநர், இதன் மீதான தானது அறிக்கையில், ஊராட்சிகளின் தேவைக்ாக தெருவிளக்கு சாதனங்களை தரமான ஐ.எஸ்.ஐ / ஐ.எஸ்.ஒ முத்திரையுள்ள பொருட்களை கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு வாங்கி பயன்படுத்தலாம் என கேட்டுக் கொண்டுள்ளார்.

அ) உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாங்கப்படும் தெருவிளக்கு சாதனங்கள் ஐ.எஸ்.ஐ / ஐ.எஸ்.ஒ 9000 முத்திரை கொண்டதாக இருக்க வேண்டும்.

ஆ) அரசு ஆணை எண் 223. ஊரக வளர்ச்சிதுறை நாள் 19.2.94 ல் தெரிவித்துள்ளபடி தெரு விளக்கு சாதனங்கள் மாற்றுவதற்கான ஆணையினை சார்ந்தே பொருட்களின் தேவைகளும் இருக்க வேண்டும் (ஒரு வருடத்திற்கு இரண்டே குழல்விளக்குகள் ஒரு வருடத்திற்கு ஒரு சோக் ஒரு வருடத்திற்கு மூன்று ஸ்டார்ட்டர்கள், சோடியம் ஆவி மற்றும் மெர்குரி ஆவி விளக்குகள் மூன்று ஆண்டுகளுக்கு இரண்டு என்ற விகிதத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்,

இ) தெருவிளக்கு சாதனங்கள் வாங்க ஊராட்சி மன்றங்களில் உரிய தீர்மானங்கள் இயற்றப்பட்டு மன்ற ஒப்புதல் பெறப்பட வேண்டும் அவசரகால நடவடிக்கையாக பொருட்கள் வாங்க நேரிட்டால் அதன் பிறகு நடக்கும் முதல் மன்ற கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரும், பேரூராட்சிகள் இயக்குநரும் இதே போன்ற ஒத்த கருத்தினை அரசிற்குத் தெரிவித்துள்ளார்கள்.

4. அரசாணை நிலை எண் 195, நிதித்துறை நாள் 4.5.98 ல் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்ட 350 பொருட்களும் 19.2.97 க்கு முன்னர் தமிழ் நாட்டில் இயங்கி வந்த சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து மட்டிலும் முழுவதுமாக கொள்முதல் செய்வதன் அடிப்படையில் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கிக் கொள்ள ஏதுவாக வகை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. அரசு இவற்றை நன்கு பரிசீலித்த பின்னர் உள்ளாட்சி அமைப்புகள் அனைத்திற்கும் தெரு விளக்கு உபகரன பொருட்களை வாங்கிக்கொள்ள கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

அ) உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாங்கப்படும் தெரு விளக்கு சாதனங்கள் ஐ.எஸ்.ஐ / ஐ.எஸ்.ஒ 9000 முத்திரை கொண்டதாக இருக்க வேண்டும். இவற்றை உள்ளூரிலேயே வாங்கிக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

## 18. STREET LIGHTS

ஆ) அரசாணை எண் 223 ஊரக வளர்ச்சி துறை நாள் 19.12.94 ல் தெரிவித்துள்ள படி தெருவிளக்கு சாதனங்கள் மாற்றுவதற்கான ஆணையினை சார்ந்தே பொருட்களின் தேவைகளும் இருக்க வேண்டும் ( ஒரு வருடத்திற்கு இரண்டு குழல்விளக்குகள்/ ஒரு வருடத்திற்கு ஒரு சோக் ஒரு வருடத்திற்கு மூன்று ஸ்டார்ட்டர்கள்/ சோடியம் ஆவி மற்றும் மெர்குரி ஆவி விளக்குகள் மூன்று ஆண்டுகளுக்கு இரண்டு என்ற விகிதத்திற்கு மேற்படாமல் மாற்றப்பட வேண்டும்).

இ) தெருவிளக்கு சாதனங்கள் வாங்க உள்ளாட்சி அமைப்புகளில் உரிய தீர்மானங்கள் இயற்றப்பட்டு மன்ற ஒப்புதல் பெறப்பட வேண்டும். அவசரகால நடவடிக்கையாக பொருட்கள் வாங்க நேரிட்டால் அதன் பிறகு நடக்கும் முதல் மன்ற கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

மேலும் உள்ளாட்சி அமைப்புகள் பெருமளவில் தெருவிளக்கு உபகரணங்களை, அதாவது விளக்குப பொறுத்திகள் (Light Fittings) மற்றும் சோக்குகள் ( Chokes ) வாங்க முடிவு செய்யும்போது ரூ 1 லட்சத்திற்கோ அல்லது அதற்கு அதிகமாகவோ வாங்கும்போது திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி கோருவதன் மூலமாக ( Open Tender ) இம்மாநிலத்தில் உள்ள சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டும். ஆனால், ரூ 1 லட்சத்தி;ற்குக் குறைவாக தெருவிளக்கு உபகரணங்களை கொள்முதல் செய்யும்போது ஒப்பந்த விலைப்புள்ளியை Limited Tender மூலம் பெற்று அதற்குரிய விதிறைகளைப் பின்பற்றி வாங்கவேண்டும். இந்த ஆணை 16.7.98 முதல் நடைமுறைக்கு வருகிறது.

6. இக்கோப்பு, சிறுதொழில் / எரிசக்தி / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளின் அ ச.கு. எண் முறையே எ.செ./98 நாள் 8.6.98 எ.செ./98 Nil/. செ/98,நாள் 10.7.98 மற்றும் நிதித்துறையின் அரசு அ.ச.கு.எண் 1551/ எஸ்,பி,இ / 98 /1, நாள் 16.7.98 இசைவு மூலம் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்